Visit QB365-SLMS - https://www.qb365.in/slms/ Complete Questions and Answers

Answers Key:

குறுவினா

1. காலின் மெக்கன்சியின் தொகுப்புகளை அடிப்படையாகக்கொண்டு 1869- இல் உருவாக்கப்பட்டது
   இந்நூலகம் அரிய ஓலைச்சுவடிகள் தாள் சுவடிகள் புத்தகங்கள் எனப் பெரும் தொகுப்புகளைக் கொண்டது
2. **இந்தோ -சாரசனிக் கட்டடக்கலை,**
   முகலாயக் கட்டடக்கலை பிரித்தானியக் கட்டடக்கலை இந்தியப் பாரம்பரிய பாணி ஆகியவற்றை கலந்து உருவாக்கப்பட்டது இந்தோ சாரசனிக் கட்டடக்கலை ஆகும் .

   இப்பாணியில்,1768 இல் கட்டி முடிக்கப்பட்ட முதல் கட்டடம் சேப்பாக்கம் அரண்மனை ஆகும்

   மேலும் சென்னையில் புகழ்பெற்ற மத்தியக் தொடர்வண்டி நிலையம் தென்னகத் தொடர்வண்டித் தலைமையகம் எழும்பூர் தொடர்வண்டி நிலையம் பொது அஞ்சல் அலுவலகம் உயர்நீதிமன்றம் சென்னைப் பல்கலைக்கழகம் ரிப்பன் கட்டடம் விக்டோரியா அரங்கு போன்றவை இந்தோ சாரசனிக் கட்டடக்கலைக்குச் சான்றாகும்
3. கொற்றலையாறு, கூவம் ஆறு ,அடையாறு, பாலாறு
4. மயிலாப்பூர் கி.பி , (பொ .ஆ) 2-ஆம் நூற்றாண்டில் தாலமி என்பவரால் மல்லியார்பா எனும் துறைமுகமாகச் சுட்டப்பட்டுள்ளது
   மயிலாப்பூரில் உள்ள கோவில்கள் ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தலங்களாக விளங்குகின்றன
5. கிழக்கிந்திய நிறுவனம் பெரும்பாலும் துணி வணிகத்தையே செய்தது
   அதனால் இந்தியாவின் பல பகுதிகளில் இருந்தும் நெசவாளர்கள் சென்னை நோக்கி வந்தனர்
6. மயிலாப்பூர் கி.பி , (பொ .ஆ) 2-ஆம் நூற்றாண்டில் தாலமி என்பவரால் மல்லியார்பா எனும் துறைமுகமாகச் சுட்டப்பட்டுள்ளது
   இது இன்று சென்னையின் ஒரு பகுதியாக விளங்கும் மயிலாப்பூர் ஆகும்
7. **சென்னையின் அறிவு வளர்ச்சிக்குத் துணை நின்றவை:**
   1.அச்சுப்பரவல்
   2.நாளிதழ்ப் பெருக்கம்
8. **சென்னை இலக்கியச் சங்க நூலகம் ,**
   1812 இல் கோட்டைக் கல்லூரியின் இணைவாக உருவானது
   இங்கு அரிய பல நூல்கள் உள்ளன
   இந்தியாவின் பழைமையான நூலகங்களில் இதுவும் ஒன்று
9. 2010-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது ஆசியாவின் மூன்றாவது மிகப்பெரிய நூலகம்
10. வடசென்னைப் பகுதிகள் மதராசப்பட்டினம் என்றும் தென்சென்னைப் பகுதிகள் சென்னப்பட்டினம் என்றும் வழங்கப்பட்டன
    ஆங்கிலேயர் இவ்விரண்டு பகுதிகளையும் இணைத்து மதராஸ் என்று அழைத்தனர்
    பின்பு அதுவே மெட்ராஸ் ஆகி இன்று சென்னை என அழைக்கப்படுகிறது
11. 1.திருவொற்றியூர்
    2.திருவான்மியூர்
    3.மயிலாப்பூர்
    4.திருமுல்லைவாயில்
12. 1.சேத்துப்பட்டு
    2.நுங்கம்பாக்கம்
    3.வியாசர்பாடி
    4.மாதவரம்
    5.கோயம்பேடு
    6.தாம்பரம்
13. 1.சேப்பாக்கம் அரண்மனை
    2.மத்தியத் தொடர்வண்டி நிலையம்
    3.தென்னகத் தொடர்வண்டித் தலைமையகம்
    4.எழும்பூர் தொடர்வண்டி நிலையம்
    5.பொது அஞ்சல் அலுவலகம்
    6.உயர்நீதிமன்றம்
    7.சென்னைப் பல்கலைக்கழகம்
    8.ரிப்பன் கட்டடம்
    9.விக்டோரியா அரங்கு
14. 1812-இல் உருவான சென்னைக்கு கோட்டைக் கல்லூரி
    1837-இல் தொடங்கப்பட்ட கிறித்துவக் கல்லூரி 1840-இல் உருவான பிரசிடென்சி பள்ளி மாநிலக் கல்லூரி
15. உலகத் தமிழாராய்ச்சித் நிறுவன நூலகம் ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம் மறைமலையடிகள் நூலகம் செம்மொழித் தமிழாய்வு நூலகம்
    உ.வே.சா நூலகம்


QB
365
Study
Material
QUESTION BANK 365